தி -இந்து 10/02/2020

பணியில் சேரும் ஆசிரியர்களிடம்

# தனியார் கல்லூரிகள் அசல் சான்று பெறக்கூடாது

- ஏஐசிடிஇ அறிவுறுத்தல்

■ சென்னை

தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான செயல்முறை விதிகளை வகுத்து அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழுமம் (ஏஐசிடிஇ) வெளியிட்டு வருகிறது. இந்த விதிகளை கல்வி மையங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும். அந்தவகையில் நிகர்நிலை பல்கலைக்கழகங்கள், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்கான விதிகள் அடங்கிய புதிய வழிகாட்டு கையேட்டை ஏஐசிடிஇ வெளியிட்டுள்ளது.

அதன்படி, வரும் கல்வியாண்டு முதல் நிகர்நிலை பல்கலைக் கழகங்கள், தன்னாட்சி கல்லூரிகள் ஆசிரியர்களின் எண்ணிக்கையை 1:15 விகிதாசாரத்தில் பராமரிக்க வேண்டும்.

பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சான்றிதழ்களை பெற்று வைத்திருக்கக்கூடாது. சான்றிதழ்களை சமர்பிக்கவும் நிர்பந்திக்கக் கூடாது. மீறினால் அங்கீகாரம் ரத்து உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பன உட்பட அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

இதையடுத்து அங்கீகாரம் கோரி விண்ணப்பிக்கும் போது வழிகாட்டு கையேட்டில் உள்ள விதிகள் முழுமையாக இருந்தால் மட்டுமே கல்லூரிக்கு அனுமதி வழங்கப்படும் என்று ஏஐசி டிஇ தெரிவித்துள்ளது.

அதேநேரம் அங்கீகாரம் பெறுவதற்கான கையேடு தாமதமாக வெளியிடப்பட்டதால் பொறியியல் கலந்தாய்வு பணிகள் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கு பிரத்யேகமாக விதிகள் வகுக்கப்பட வேண்டும் எனவும் பேராசிரியர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.